| Headline | No blackouts during GE14 electoral process, assures Ongkili | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 09 May 2018 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Page No | 1,13 |
| ArticleSize | 227 cm² | Journalist | NULL |
| PR Value | RM 3,962 | | |
| | | | |



# 14ஆவது பொதுத்தேர்தலில் மின்சாரத் தடை ஏற்படாது

## அமைச்சர் உறுதி



புத்ராஜெயா, மே 9-

வரும் 14ஆவது பொதுத்தேர்தலின்போது மின்சாரத் தடை ஏதுமின்றி தேர்தல் சுமுகமாக நடைபெறும் என்று எரிபொருள், பசுமை தொழில்நுட்பம், நீர்வளத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் மெக்ஸிமஸ் ஜோனிட்டி ஓங்கிலி உறுதி கூறினார்.

கடந்த 28.4.2018ஆம் தேதி முதல் இன்று 9.5.2018ஆம் தேதி வரை நடைபெறும் நாட்டின் 14ஆவது பொதுத்தேர்தலின்போது எந்தவித மின்சாரத் தடையும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த தெனாகா நேஷனல் பெர்ஹாட் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

தீபகற்ப மலேசியா, சபா, சரவா ஆகிய பகுதிகளில் நடைபெறும் வாக்களிப்பு, வாக்குகள் எண்ணப்படும் பணிகள் எந்தவிதத் தடையுமின்றி சுமுகமாக நடைபெற இது வழிவகுக்கும் என்று நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அமைச்சர் சொன்னார்.

இன்று வாக்களிப்பு நாள். இன்று அனைத்து இடங்களிலும் மின்சார வசதி தங்கு தடையின்றி இருப்பதை தெனாகா

பக்கம் 13

## 14ஆவது பொதுத்தேர்தலில்...

முதல் பக்கத் தொடர்ச்சி...

நேஷனல் பெர்ஹாட் உறுதிப்படுத்தும் என்ற அவர், ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேர்தல் நடவடிக்கை அறைகளில் மின்சார வசதி இருப்பதை உறுதிப்படுத்த டி.என்.பி. தொழில்நுட்பப் பணியாளர்கள் தயார் நிலையில் இருப்பார்கள் என்றார்.

வாக்களிப்பு மையங்கள், வாக்குகள் எண்ணப்படும் மையங்கள் உட்பட அதிகாரப்பூர்மாக அறிவிப்பு செய் யப்படும் இடங்களிலும் மின்சார வசதி இருப் பதை உறுதிப்படுத்த தயார் நிலையில் டி.என். பி. 61 லட்ச ரிங்கிட் செலவில் 189 மின் உற்பத்தி இயந்திரங்களை வாங்கியுள்ளதாகவும் அவர் சொன்னார்.

மின்தடை தொடர்பான புகார்களுக்கு பொதுமக்கள் 15454 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலம் என்றும் அந்த அறிக்கை கூறியது.

Powered by: iSENTIA